O.S. 197/2022 நாள் 04.07.2023

வா.சா.1 பாத்திமுத்து

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நான், என் பெற்றோர், என் சகோதர சகோதரிகள் அனைவரும் பிறப்பால் இஸ்லாமியர்கள் என்றால் சரிதான். என் தாயார் இறக்கும்வரை எனக்கும் என் தாயாருக்கும் நல்ல உறவுமுறை என்றால் சரிதான். என் தாயார் இறக்கும் வரை நானும் என் சகோதர சகோதரிகள் அனைவரும் நல்ல உறவுமுறை என்றால் சரிதான். என் தாயார் பெயர் நூர்ஜஹான். தகப்பனார் பெயர் காதர் மைதீன். என் தாயார் இறந்த பின்பு எனக்கும் என் சகோதர சகோதரிகளுக்கும் பேச்சு வார்த்தை இல்லை. நான் தற்போது இந்த வழக்கு ஒவ்வொரு வாய்தாவிற்கும் சென்னையில் இருந்து தான் வருகிறேன் என்றால் சரிதான். சென்னையில் 36 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். பிராதில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் என் தாயாரின் தனிப்பட்ட கிரய சொத்துக்கள் என்று தான் பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாசா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 ஆவணங்கள் என் தாயார் நூர்ஜஹான் நேரடியாக திருக்குறுங்குடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று அவர் எழுதியுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 5.11.2013 ம் தேதிய என் தாயார் எழுதிய செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் நான் பாகம் கோருகிறேன். 5.11.2013 ம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். 5.11.2013 ம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிய உடன் மேற்படி ஆவணம் என் தாயார் நூர்ஜஹான் என் வசம் கொடுத்தார். அந்த ஆவணத்தை என் தாயாரிடம் நான் எப்போது திருப்பிக்

கொடுத்தேன் என்று என்னால் சொல்ல முடியாது. வா.சா.ஆ.7 ஆவணத்தை நான் முழுவதும் படித்து பார்த்துள்ளேன். வா.சா.ஆ.7 ஆவணத்திற்கு வாசகங்கள் அனைத்தும் என் தாயார் சொல்லித் தான் எழுதப்பட்டது. வா.சா.ஆ.7 ஆவணத்தில் மேற்படி ஆவணத்தில் கண்ட சொத்தை நாங்களும் எங்கள் தாயாரும் கூட்டாக அனுபவித்து வரவேண்டியது என்றும், தாயார் ஆயுசுக்கு பின்னால் ஆவணத்தில் கண்ட சொத்தை நாங்கள் வில்லங்கத்திற்கு உட்படுத்தாமல் சொத்தில் உள்ள கட்டிடங்களின் வருமானத்தை மட்டும் கீழ்கண்ட விகிதாச்சாரப்படி அனுபவித்து கொள்ள வேண்டியது என்றும் எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 ஆவணப்படி எனக்கு விகிதாச்சாரமாக கட்டிடத்தில் உள்ள வருமானத்தில் இருந்து 12% வருமானம் பெற்றுக் கொள்ள வேண்டியது என குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போல் வழக்கின் 2, 3ம் பிரதிவாதிகளுக்கு 12% வருமானத்தில் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டியது என்றும், 1ம் பிரதிவாதிக்கு வருமானத்தில் 60% பெற்றுக் கொள்ள வேண்டியது என்றும் எழுதப்பட்டுள்ளது. 4% தர்மகாரியத்திற்கு சொத்தின் வருமானத்தில் இருந்து எடுத்துக் கொள்ள வேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 எழுதிய பின்பு கட்டிடத்தில் உள்ள வருமானங்கள் அனைத்தையும் என் தாயார் நூர்ஜஹான் தான் பெற்று வந்தார் என்றால் சரிதான். அந்த வருமானத்தில் இருந்து பிள்ளைகளாகிய எங்களுக்கும் என் தாயார் பிரித்துக் கொடுப்பார். மாத மாதம் கொடுக்க மாட்டார். நான் அவ்வப்போது ஊருக்கு வரும்போது என் தாயார் எனக்கு பணம் கொடுப்பார். வங்கி மூலமாக என் தாயார் எனக்கு கொடுத்ததில்லை. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எவ்வப்போது என் தாயார் பணம் கொடுத்தார் என்பது எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.7 க்கு பின்பு சொத்துக்களுக்குரிய

பட்டா, மின் இணைப்பு, கட்டிடத் தீர்வை அனைத்தும் என் தாயார் நூர்ஜஹான் பெயரிலேயே உள்ளது. என் தாயார் வா.சா.ஆ.7 ஐ என்னிடம் கொடுக்கும்போது தாய் பத்திரங்களையும் சேர்த்து தான் கொடுத்தார். 4 ம் பிரதிவாதி வா.சா.ஆ.3 கிரய ஆவணத்தை என் தாயார் தான் எழுதிக் கொடுத்தார். வா.சா.ஆ.3 கிரய ஆவணத்திற்கு பின்பு மேற்படி கிரய ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் 4 ம் பிரதிவாதியின் வசம் தான் உள்ளது. பிராது சொத்துக்களில் BSNL அலுவலகம் இயங்கி வருகிறது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அலுவலகமும் அதில் அமைந்துள்ளது. பிராது சொத்துக்களில் மொத்தம் 40 கடைகள் இருப்பதாக நான் சொல்லியுள்ளேன். 40 கடைகளும் வாடகைக்கு விடப்பட்டிருக்கிறதா என்றால் எத்தனை கடைகள் வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது என்றும், எத்தனை கடைகள் காலியாக உள்ளது என்றும் எனக்குத் தெரியாது. என் தாயார் உயிருடன் இருக்கும்போதும் எத்தனை கடைகள் வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது என்றும், எத்தனை கடைகள் காலியாக இருந்தது என்றும் எனக்குத் தெரியாது. பிராது 1 வது தபசிலில் உள்ள கட்டிடங்கள் என் தாயார் தன்னுடைய பெயரான நூர் காம்ப்ளக்ஸ் என்று என் தாயாரால் கட்டப்பட்டுள்ளது. மேற்படி 40 கடைகளுக்கு மேல் மாடியில் ஒரு பகுதியில் திருமண மஹாலும், ஒரு பகுதியில் டைனிங் ஹால் உள்ளது. மேற்படி திருமண மஹாலுக்கான சமையல்கூடம் கட்டிடத்தின் பின்பகுதியில் உள்ளது. 40 கடைகள், திருமண மஹால், டைனிங் ஹால், சமையல் கூடம் போன்றவைகளுக்கு எத்தனை மின் இணைப்புகள், எத்தனை குடிநீர் இணைப்புகள் உள்ளது என்று எனக்குத் தெரியாது. 3 போர்வெல் உள்ளது. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் பிராது 1 வது தபசிலில் உள்ள கட்டுமானங்களின் புகைப்படங்கள் என்றால் சரிதான்.

அந்த புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு பி.வா.சா.ஆ.1 வரிசை. 22.3.2021 தேதியில் என் தாயார் எனக்கும் என் சகோதரிகளான 2, 3ம் பிரதிவாதிகளுக்கு எழுதிய தனித்தனியான செட்டில்மெண்டுகளில் அசல் எனக்கு எழுதப்பட்டது என்னிடம் இல்லை. மற்ற இரண்டு ஆவணங்களான வா.சா.ஆ.4, வா.சா.ஆ.6 அசல் ஆவணங்கள் 2, 3 பிரதிவாதிகள் வசம் கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 ஆவணத்தின் அசல் என்னுடைய சகோதரியான 3ம் பிரதிவாதி முகம்மது மீரம்மாள் வசம் உள்ளது. மேற்படி ஆவணத்தை என் தாயார் 3ம் பிரதிவாதி வசம் கொடுத்துள்ளார். 4ம் பிரதிவாதி அவர் கிரயம் பெற்றுள்ள வா.சா.ஆ.3 சொத்துக்களை பிரதிபிரயோசனமாக ரூ.1 கோடியே 40 லட்சம் ரொக்கம் கொடுத்து வாங்கியுள்ளார். வா.சா.ஆ.4, மற்றும் வா.சா.ஆ.6 ஆவண சொத்துக்கள் இன்றைய மார்க்கெட் மதிப்பு படி ரூ.2 கோடி பெறும். நான் இந்த வழக்கில் என் பாக மதிப்பை ரூ.3 கோடியாக மதித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் தாயார் 22.3.2021 தேதிய செட்டில்மெண்ட் படி அவரவர்களுக்கு எழுதிய சொத்தின் வாடகைகளை 2, 3 பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு எழுதி வைத்த 22.3.2021 தேதிய செட்டில்மெண்ட் சொத்துக்களின் வாடகையை யார் வாங்குகிறார்கள் என்று எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.7 ஆவணப்படி நூர்ஜஹான் சொத்தின் அனுபவத்தை எனக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணப்படி சொத்துக்களை எங்களுக்கு சர்வ சுதந்திரமாக உரிமை பாத்தியப்படுத்தி கொடுக்கவில்லை என்றால் எங்களை சேர்ந்து கூட்டாக அனுபவித்துக் கொள்ள கூறி அதில் எழுதினார்கள். என் தாயார் பொய் கூற மாட்டார்கள். இஸ்லாம் மத மார்க்கப்படி நடக்கக்கூடிய ஒரு நல்ல இஸ்லாமியப் பெண்

என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் என் தாயார் வா.சா.ஆ.7 ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றும் அதை நடைமுறைப்படுத்த இயலாது என்றும் வா.சா.ஆ.7 ஆவணப்படி நாங்கள் யாரும் வா.சா.ஆ.7 நன்கொடையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதாலும் நாங்கள் கேட்டுக் கொண்டதின் பேரிலும் வா.சா.ஆ.7 ஆவணத்தை ரத்து செய்திருப்பதாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் சங்கதிகள் கண்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த வாசகங்கள் என் தம்பியால் பொய்யாக சொல்லி அவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அந்த வாசகங்கள் என் தம்பியால் பொய்யாக சொல்லி அவ்வாறு எழுதப்பட்டுள்ளது என்ற விவரத்தை என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணம் சட்டப்படி செல்லும் என்று தான் நான் கட்சி செய்கிறேன். வா.சா.ஆ.7 படி எனக்கு 12% வருமானம் மட்டும் தான் கிடைக்கத்தக்கது என்று உள்ளது. வா.சா.ஆ.7 ஆவணத்தின் அடிப்படையில் நான் கேட்டுள்ள 1/4 பாகம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி ராமசாமி நல்ல எண்ணத்தின் பேரில் முறையாக கிரயம் பெற்றவர் என்றால் சரியல்ல. என் தாயாருக்கு இதய நோய் இருந்தது. அதற்கு என் தாயாருக்கு மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கு முன்பாக நான் சென்னையில் ரயில்வே மருத்துவமனையில் வைத்து என் தாயாருக்கு இருதய அறுவை சிகிச்சை செய்து செலவு செய்தேன். சென்னையில் ரயில்வே மருத்துவமனையில் வைத்து என் தாயாருக்கு இருதய அறுவை சிகிச்சை செய்து செலவு செய்தேன் என்று பிராதில் சொல்லவில்லை என்றும், அவ்வாறு நான் சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் என் தாயாருக்கு செய்த மருத்துவ

சிகிச்சை அனைத்தையும் 3 ம் பிரதிவாதி மீரம்மாள் தான் செய்தார் என்றால் சரியல்ல. என் தாயார் பணத்தில் இருந்து தான் அவர் செலவு செய்தார். நான் பிராதில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும் நான் தாக்கல் செய்துள்ள பிராதை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.